பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹு வைகாசி மீ 31 உ வெள்ளிக்கிழமை (14-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 192

# கொக்கட்டிச்சோலையில் 160 தமிழர் படுகொலை!

## 4 கிராமங்களில் 400 வீடுகள் தீக்கிரை!!

## ஸ்ரீலங்கா இராணுவம் வெறியாட்டம்

கொழும்பு, ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலைப் பகுதியில் கடந்த இரு நாட்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய வெறியாட்டத்தில் நூற்றியறுபதுக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். நான்கு கிராமங்களில் சுமார் நானூறு வீடுகள் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறி அப்பகுதியில் உள்ள நான்கு இராமங்களுக்குள் புகுந்த படையினர் இராமவாசிகளைச் சுட்டும் வெட்டியும் அடித்தும் கொலை செய்தனர் என்று அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

படையினரின் வெறியாட்டம் நேற்றுவரை தொடர்ந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

படுகொலையான 47பேரின் சடலங்கள் முதலில் கண்டு பிடிக்கப்பட்டன என்று ஒரு செய்தி கூறியது.

பதினாறு தமிழர்களின் சடலங்களைப் படையினர் இடங்கு ஒன்றில் போட்டு எரித்தனர் என்று சுயாதீன செய்திகளை ஆதாரம் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

''பாதிக்கப்பட்ட பகுதிக

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்கு!

ஊர்காவற்றுறை இன்ன மடுப்பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை ஐந்து மணி முதல் நண்பகல் வரை சரவணை, சோழாவத்தை ஆகியிருப்பு பகுதிகளை நோக்கி விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தினர். இத்தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

சரவணைப் பகுதியில் காலை 9 மணியளவில் பெரும் புகை மண்டலம் எழுந்ததைக் காணமுடிந்தது. (உ-125)

## கஜுவத்தையில் கண்ணி; ராணுவ வாகனம் சிதறியது!

யாழ்ப்பாணம் ஜூன் 14

மன்னார் கஜுவத்தை இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தினரின் வாகனம் ஒன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியது.

நேற்று முன்தினம் காலை கொண்டச்சிக்கு... வாகனங்களிலும் கால் நடையாகவும் முன்னேறிய இராணுவத்தினரே இலிபாலம் என்ற இடத்தில் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இவ் வாகனத்தில் சுமார் இருபது இராணுவத்தினர் சென்றனர் என்றும், உயிரிழந்தோரின் எண்ணிக்கை தெரியவில்லை என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-த)

## ஐந்து படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 14

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் ஐந்து அரசபடையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை இராணுவத்தினர் நேற்று முன்தினம் நண்பகல் டிராக்டர் ஒன்றில் மண்முனைப் பகுதிக்குச் சென்று விட்டு திரும்பி வரும்போது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்.

மன்னார் பகுதியில் நடந்த இன்னொரு மோதலில் மூன்று அரசுப்படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-த-எ)

## முச்சந்தி முரளி



உலையளின்ரை வெறியாட்டத்துக்கு சீனாக்காரர் உஷார் கொடுக்கினம் எண்டு சொல்லுங்கோ......!

## மாணவிகளை வெளியேற்ற கோரிக்கை

சென்னை, ஜூன் 14

தமிழ்நாடு - சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்று வரும் ஈழ மாணவிகளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என தென் ஆர்காடு அ.தி.மு.க. அணி கோரியது.

ராஜீவ் கொலையுண்டதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

## பேச்சுக்கு நிபந்தனைகள் இருக்கும் என்கிறார் பிரட்மன்

கொழும்பு, ஜூன் 14

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்கள் நடத்துவதாக இருந்தால், அது சில முன்நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நிபந்தனையற்ற பேச்சுக்களை இலங்கை அரசுடன் நடத்த தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருப்பது பற்றிக் கேட்டபோது,

''அதுபற்றி அதிகார பூர்வமான தகவல் ஏதும் எமக்கு கிடைக்கவில்லை'' — என்று அவர் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார். (அ-எ)

## முத்தமிழ் விழா நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

முத்தமிழ் விழாவின் நான்காம் கட்ட நிகழ்ச்சிகள் மேலும் ஒரு நாளைக்கு நீடிக்கப்பட்டுள்ளன.

யாழ். முற்றவெளியில் நேற்று மாலை ஆரம்பமான முதல் நாள் நிகழ்ச்சிகளை, மழை காரணமாக இடை நடுவில் நிறுத்த வேண்டியதாயிற்று. அதனைத் தொடர்ந்து நேற்று நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் இன்று இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஒழுங்கில் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

முத்தமிழ் விழாவின் மூன்றாம் கட்டமாக நேற்று யாழ். முற்றவெளியில் ஆரம்பமான நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு

[6ஆம் பக்கம் பார்க்க]

## வ.பி.போ.ச. ஊழியருக்கு டிசம்பர், ஜனவரி சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் டிசம்பர், ஜனவரி மாதங்களுக்கான சம்பளம் அடுத்த வாரம் வழங்கப்படவிருக்கிறது.

கொழும்பு சென்று நேற்று திரும்பிய சபையின் பொது முகாமையாளர் திரு. எஸ். ஜெயசிங்கம் இந்த சம்பளத்துக்கான நிதியை பெற்று வந்துள்ளார்.

சபை ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரணப் படியின் 50 வீதத்தை வழங்க தலைமையகம் இணக்கம் தெரிவித்திருப்பதாக அவர் சொன்னார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலைச் சம்பவம்:

## விடுதலைப் புலிகள் மீதே தமிழகத்தில் சந்தேகம்!

சென்னை, ஜூன் 14

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் மீதே தமிழகத்தில் பலமாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இவ்வாறு பிரித்தானிய வானொலி நேற்றிரவு தகவல் வெளியிட்டுள்ளது. பிரித்தானிய வானொலி மேலும் தெரிவித்ததாவது:

ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த பெண்ணுடன் கூடவே நின்ற ஒரு பெண்ணுக்கும் ஒரு வாலிபருக்கும் அடைக்கலம் வழங்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வேலை தாதியான பத்மாவும் (வயது 49) அவரது (25 வயது) மகள் பாக்கியநாதனும் கைது செய்யப்பட்டனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 130மி.மீ. ஆட்லறி ஆயுதங்கள் அரசுக்கு சீனா வழங்கியது!

லண்டன், ஜூன் 14

ஸ்ரீலங்காவுக்கு 130 மி. மீ. ரக ஆட்லறி ஆயுதங்கள் பன்னிரண்டை சீனா வழங்கியுள்ளது.

இவ்வாயுதங்கள் இலங்கையை சென்றடைந்துள்ளன என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் ''ஜேன் டிபென்ஸ் வீக்லி'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய மேற்கத்திய நாடுகள் மறுத்துவரும் நேரத்தில் சீனா ஆயுதங்களை விற்க முன் வந்திருக்கிறது என்று பிரித்தானிய வானொலி தெரிவித்தது. (உ-எ)

## பிரெஞ்சுக் குழு மீது வான் தாக்கு; படையினரின் தவறு இல்லையாம்!

### தனிநபர் ஆணையாளர் அறிக்கை

கொழும்பு, ஜூன் 14

எம். எஸ். எவ் என்றழைக்கப்படும் பிரெஞ்சு மருத்துவ தொண்டர் நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மீது கடந்த மே மாதம் 3ஆம் திகதி நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களுக்கு ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர் எவரும் பொறுப்பாளிகள் அல்லர்.

—இப்படி, அச்சம்பவம் குறித்து விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணையாளர் எல். எச். டி. அல்விஸ் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

பிரெஞ்சு வைத்திய தொண்டர் நிறுவனத்தின் வாகனம் சம்பவதினத்தன்று அனுமதி வழங்கப்படாத பாதையில் சென்றுகொண்டிருந்தபோது, வவுனியாவைச் சூழ உள்ள பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூடு அல்லது தாக்குதல் சம்பவம் நடைபெற்றதென்று ஆணையாளர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

விமானத்தின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ய பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றிற்கு எதிராக—சட்டரீதியான—நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, தவறுதலாக அச் சம்பவம் ஏற்பட்டதாக ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

...யில் இடம்பெற்ற முன்கண்ட...

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்த இன பொமரேனியன் நாய்க்குட்டிகள் ஒரு மாதம் முடிவடைந்த ஆண், பெண் குட்டிகளும், நான்கு மாதம் முடிவடைந்த ஒரு சோடி ஆண், பெண் குட்டிகளும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள: முருகேசு மணி பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் விடுதிசாலை முகவரி. [17170]

### டைப்ரைட்டர்

Typewriters: Portable-Standard தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மற்றும் Typewriters சிறந்த முறையில் திருத்தி கொடுக்கப்படும் FUDO: 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-0152]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவாயினும் உரிய பதில் தரப்படும் ஜாதகம், குறிப்பு எழுதவும் கிரகங்கள் விவாகப்பொருத்தம் பார்க்கவும் தொடர்பு டாக்டர் த. சிவானந்தம் பிரபல சோதிட ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி (வடக்கு), நல்லூர் [17177]

### வைத்தியம்

மங்கையரே! இளைஞர்களே! தலைமுடி உதிர்கிறதா? தலை நரைக்கின்றதா? கவலையை விடுங்கள் பலவருட அனுபவமுள்ள நாம் சிறந்த மூலிகைகள், எண்ணெய்கள் மூலமாக உங்கள் கவலையை போக்குவோம். டாக்டர் த. சிவானந்தன், சிவா வைத்திய சாலை, 384, கோவில் வீதி (வடக்கு) நல்லூர். [17178]

சருமரோகமா? தொய்வு வியாதியா? வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? குழந்தைகளின் இரத்தப் பீடையா? மாதவிடாய்க் கோளாறுகளா? கவலை வேண்டாம். நாடுங்கள் நமது டையுங்கள் டாக்டர் த. சிவானந்தன் D. A. M., R, Ag M. P (SriLanka) சிவா வைத்தியசாலை, 384, கோவில் வீதி (வடக்கு), நல்லூர். [17176]

### புத்தகம்

Writing Letters in English ஆங்கிலத்தில் கடிதம் எழுதும் G C E. படிப்போருக்கும், ஆங்கில மொழி மூலம் நடைபெறும் பரீட்சைகளில் தேர்வு நாடுவோருக்கும் உகந்த நூல். 70க்கு மேற்பட்ட மாதிரிக் கடிதங்களைக் கொண்டது. ஆக்கியோன் த. த பஞ்சாட்சரம் விலை ரூபா 60/- முன்னணி புத்தக நிலையங்களில் பெறலாம். [17179]

## நவீல்ட்
### பழைய மாணவர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14 கைதடி நவீல்ட் செவிப்புல விழிப்புலனற்றோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 14 ஆவது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

### மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14 யாழ். ... சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று (வெள்ளிக்கிழமை) காலை நடைபெறுகிறது. மாலை 3-30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும். [இ-3]

---

உ
சிவமயம்

பிரம்மோபதேச
## உபநயன அழைப்பு

★ சிரஞ்சீவி சிவானந்த சர்மா ★
★ சிரஞ்சீவி விஜயானந்த சர்மா ★
இவர்களுக்கும்

இடம்: சங்கானை, வெல்லில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்.

காலம்: 14 06 - 1991 வெள்ளி (இன்று)
காலை 6 - 00 7 - 20

நடத்திவைப்பவர்:
கலாநிதி சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள்

அன்புடன் நல்வரவை நாடும்
சிவ நித்தியானந்தக் குருக்களும் பாரியாரும் (பெற்றோர்)
முருகன் வீதி,
சங்கானை.
[4144

---

வாழ்க தமிழ்! வளர்க நம் கலைகள்!!
சிறப்பெய்தட்டும் முத்தமிழ் விழா!!!

யாழ். நகரில்!
சங்கீதம், பரதநாட்டியம், வீணை, வயலின், மிருதங்கம் புல்லாங்குழல் வகுப்புகளுக்கும், டிப்ளோமா மணிப் பொருளியல் பயிற்சிகளுக்கும் தன்னிகரில்லாத ஒரேயொரு கலைக் கல்லூரி!

## ★ கலாலயா ★

✶ 16 - 06 - 91 முதல் மேற்படி வகுப்புகளில் புதிய மாணவ மாணவியர் அனுமதிக்கப்படுவர்

விபரங்களுக்கு:

## கலாலயா
விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.

KALALAYAAH
கலாலயா

[சி-0159]

---

## இன்று முதல்
## யாழ் நகரில் புதிய இடத்தில்

DHL
WORLDWIDE EXPRESS

வெளியிடங்களுக்கான துரித தபால் சேவையை உறுதிப்படுத்தும் நோக்குடன்

**DHL நிறுவனம்**

புதிய இடத்தில் தனது சேவையை ஆரம்பிக்கிறது

## DHL INTERNATIONAL

C/O: Cosmos Marketing Services,
120, K. K. S ROAD,
JAFFNA.

[சி-0104]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## வேலுப்பிள்ளை இரத்தினம்
(இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்)

தோற்றம்: 23 04 1921
மறைவு: 14 06 - 1990

திதி: 03 — 06 — 1991

ஓராண்டு சென்றாலும் எம்மை விட்டுப் பிரிந்த நம் பிரியமுடைத் தெய்வமே உம் பிரிவுதனை அறியாது வாழ்கின்றோம் நம் உமது ஆத்மா சாந்திக்கவே!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கட்டுவன்,
தெல்லிப்பழை.

[17173]

---

# JAFFNA ENGLISH ACADEMY

### ★ TOEFL:
**(Test of English As A Foreign Language)**

சனி / ஞாயிறு — 8 00 to 10-00 a m

### ★ ESOL:
**(English for Speakers of other Languages)**

1. சனி / ஞாயிறு — 1-00 to 2-30 p m; Commencement: 16 - 06 - 1991
2. திங்கள் / வியாழன் — 10-30 to 12 Noon Commencement: 17 - 06 - 1991
3. செவ்வாய் / வெள்ளி — 9-00 to 10 30 a m. Commencement: 18 - 06 - 1991

### ★ FOLLOW - ME:
**Course (English for Communication)**

Levels I, II + III
3 Months Course
செவ்வாய் / வியாழன் — 2-30 to 4.00 p m.
Commencement: 18 - 06 1991

### ★ G. C. E.
**(Advanced Level) English - 1992**

சனி / ஞாயிறு — 2-30 to 4-00 p m.
Commencement: 16 - 06 - 1991

### ★ SPOKEN ENGLISH:

சனி / ஞாயிறு — 10 00 to 11-30 a m
திங்கள் / வியாழன் — 9-00 to 10-30 a m
Commencement: 17 - 06 - 1991

Lectures: கந்தையா நவரேந்திரன்

### ● G. C. E.
(Ordinary Level) — 90 Examination
திங்கள் / வெள்ளி — 2-30 to 4 00 p. m.
Commencement: 17 - 06 - 1991

### ● G. C. E.
(Ordinary Level) — 91 Examination
சனி / ஞாயிறு — 2-30 to 3-30 p. m
Commencement: 16 - 06 - 1991

### ● Elocution:
STAGES 1 + 2 — சனி/ஞாயிறு - 8 00 to 9-30 a m.
STAGES 3 + 4 — சனி/ஞாயிறு - 9-30 to 11 00 a.m.

### ● Spoken English:
Middle grade — Between 9 and 14 Years - சனி / ஞாயிறு — 3-30 to 4 30 p m.
Higher grade — Above 14 Years - சனி / ஞாயிறு — 4-30 to 5-30 p m.
Commencement: 16 - 06 - 1991

### ● Class Work:
Years 10, 9, 8, 7, 6 5 ஆகியனவும் அடுத்த கிழமை தொடங்குகின்றன.

ஆசிரியை: திருமதி S. ஞானசம்பந்தன்

**9, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

[சி-0105]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றீஸியன்

## தொழிற் பயிற்சி நிறுவனம்

## Patrician Institutes

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்:

1. **Computer Processing Courses**
   [1] Computer Programming in BASIC - Language and disk Operating System [Ms Dos]
   Duration:- 4 Months
   [2] Word Processing and Ms. Dos [Word Star - 4000]
   Duration:- 3 Months

   Commencing:- 19 — 06 — 1991
   Wednesday 3 00 p. m.

   Equipment Used:- LASER XT/2, XT/3, 386 and Bitcom [I B M Compatibles]

   Lecturers:- Mr. S. R. LOGE... D. C A [Systems Analyst]

2. **City and Guilds of London Institute**
   Quantity Surveying (Part - I) (6 Months)
   ஆரம்பம்: 19 — 06 — 1991
   மாலை 4 00 மணி

3. **Draughtsman Ship**
   கட்டடப் படம் வரைதல் (6 மாதம்)
   ஆரம்பம்:- 20 — 06 — 1991
   மாலை 3-00 மணி

4. **Short Hand and Typing (English)**
   தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்

5. **Electrical Wiring** —
   மின்சார இணைப்பு (3 மாதம்)

6. **Motor Mechanism**
   மோட்டார் வாகனம் திருத்துதல் (6 மாதம்)

7. **Motor Winding** —
   மோட்டார் வைன்டிங் (4 மாதம்)

8. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறுபவர்களின் நலன்கருதி "ஜெனரல் எலக்ரீஸியன்" என்னும் புதிய பயிற்சி நெறி ஆரம்பிக்சப்படுகிறது
   **General Electrician** —
   காலம் (4 மாதம்)

பாடத்திட்டம் [Subjects]

[i] அடிப்படை மின்சாரம் (AC/DC)
— BASIC Electricity (AC/DC)
[ii] மோட்டார் வைன்டிங்
— Motor Winding
[iii] ஆமச்சர் வைன்டிங்
— Armature Winding
[iv] டிரான்ஸ் போமர் வைன்டிங்
— Transformer Winding
[v] கவுஸ் வயறிங்
— House Wiring
[iv] எல்லாவிதமான மின் உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல்
— Repairing of all type of Electrical Equipments

பயிற்சி ஆரம்பம் : 19 - 06 - 1991
புதன்கிழமை காலை 9.00 மணி

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:

Registrar,

**Patrician Institute of Higher Studies,**
59, St. Patrick's Road.
Jaffna.

பதிவாளர்,
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-0161]

---

## அகதிகள் இடம் மாற்றம்

- இர்வரும் .னிக்கிழமை தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தலை ஒட்டி தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நான்கு புதிய முகாம்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதனிடையில் இம்மாதம் 13 முதல் 17ஆம் திகதி வரை இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களை விட்டு வெளியே நடமாடக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது தெரிகிறது. [சி-ஏ]

---

மானிப்பாய்

## புனித அந்தோனியார் ஆலய ஆண்டு விழா

16 06 - 1991

15-06 1991 நற்கருணைத் தினம்
மாலை 4-15 மணிக்கு ஆரம்பமாகும்.

16-06 1991 புனித அந்தோனியார் தினம்
திருப்பலி காலை 5-45 மணி
திருவிழா திருப்பலி காலை 7-15 மணி
திருச்சுருபப்பவனி.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய பரிபாலகர்
புனித அந்தோனியார் ஆலயம்,
மானிப்பாய்.

[17167]

---

# JAFFNA COLLEGE
# INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKKODDAI

தற்போதைய நிலைகளைக் கருத்தில் கொண்டு
91 / 92 கல்வியாண்டுக்கான
தன் பயிற்சி நெறிகளை

## யாழ்ப்பாணத்திலும்

(St Johns Academy, Main St, Chundikuli)
நடத்த உத்தேசித்துள்ளது.

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
**JULY 1991** இல் ஆரம்பமாகின்றன

### 1. Technician Diploma Courses
(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) Electronics & Communication
(ii) Mechanical Engineering
(iii) Electrical Engineering
(iv) Civil Engineering (2 Years)

கல்வித் தகைமை:
G C E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 3 வருடங்கள்

### 2. Diploma Courses
(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing
(BASIC, COBOL & d BASE III +)
Practical on IBM - PC AT & MAT 386 Industrial Control
MS DOS Operating System

கல்வித் தகைமை
G C E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: One year

(iii) Advanced Diploma in Computing
(ஆங்கில மூலம்)
Syllabus includes British Computer Society (B C S) Part I and Australian Computer Society A C S Examination

கல்வித் தகைமை:
G C E (O/L) 5 subjects including Maths, English & G C E (A/L) one subject.

Duration: One Year

### 3. Engineering Course
(6 Semesters)

Full time preparing students for E C E Part I (London Exam & I. E. S. L. Part I Exam)

Qualification:
G C E (A/L) Maths with 3 or 4 Passes in two sittings

### 4. Tech. Certificate Course
(ஆங்கில மூலம்)

(i) Radio & T V Servicing
(ii) Automobile Practice

கல்வித் தகைமை:
G C E (O/L) with Maths & Science

காலம்: One Year

### 5. Craft Certificate Courses
(தமிழ் மூலம்)

(i) ஒட்டோட்டப் பயிற்சி (Welding Practice)

கல்வித் தகைமை:
G C E (O/L) படித்திருத்தல் வேண்டும்.

காலம்: ஒரு வருடம்

முக்கிய குறிப்பு:
விண்ணப்பப் படிவம்
விலை 10 ரூபா
பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்.
1 J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டை.
2. ST. JOHNS COLLEGE, WELFARE வழகம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 20-06-1991**

SELECTION AFTER INTERVIEW

[சி-0094]

- பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுந்திடுமின் இளஞ்சிங்கங்காள்

முத்தமிழ் முக்கனியைச் சுவைத்து தமிழ்ந்து
மூவேந்தர் முதாலம் போற்றினார்கள்
இத்தரிநம் தமிழ்வளர்த்து மிகக்கோடி
எழுந்திடுமின் வீர உலேளஞ்சிங்கங்காள்.

— கவியோகி சுத்தானந்த பாரதியார்

**மில்க்வைற்**
**சவர்க்காரத் தொழிலகம்,**
யாழ்ப்பாணம்.

(சி/0162)



## ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

EXAMINATION FOR RECRUITMENT OF
**ENGLISH ASSISTANT TEACHERS**

ஜுலை 91 இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

**துரித பயிற்சி வகுப்புகள்**

**ஆரம்பம்: 16 - 06 - 1991 9-00 a m.**

★ G.C.E. O/L, N.C.G.E பரீட்சைகளில் ஒரே தடவையில் ஆங்கிலம் உட்பட 8 பாடங்களில் திறமைச் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ வயதெல்லை 18 — 40
★ விண்ணப்ப முடிவுத் திகதி 14 - 06 - 991

விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்


1. இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
2. கட்டணம் ரூபா 150-00 (முழுப் பயிற்சிக்கும்)
3. பல அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.

விவரங்களுக்கு: நேரில்

**ASTAN INSTITUTE,**
101 / 10, STANLEY ROAD, JAFFNA
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(இ-0042)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா கனகசுந்தரம்**
(பொலிஸ் சார்ஜன்ட்)

ஆண்டவன் படைப்பு: 17-02-1932
அநியாய அழிப்பு: 04-06-1981

**திதி 14-06-1991**

1981 ஆம் ஆண்டு நாச்சிமார் கோவிலில் நடந்த கூட்டத்தில் அகால மரணமடைந்த அன்பு அப்பாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

இந்நினைவு நாளில் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள்,
சகோதரிகள், மருமக்கள்.

(4140)

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வட இலங்கை சங்கீதசபை எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடாத்தவிருந்த தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைகள் ஜூன் 22, 23ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் —

முன்னர் அறிவிக்கப்பட்ட யூனியன் கல்லூரிக்குப் பதிலாக மகிலடி மகா வித்தியாலயமும் —

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயத்துக்குப் பதிலாக வேம்படி மகளிர் கல்லூரியும் புதிய பரீட்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. [இ-5]


## நேர்முகப் பரீட்சை

**கல்விப் பட்டப்பின் டிப்ளோமா**
**பகுதி நேரம்/ முழுநேரம்**
**1990/91**

மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு எழுத்துத் தேர்வில் தகுதிபெற்ற மாணவர்கள் அனைவருக்கும் 30 06-91 முற்பகல் 8-30 தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை பல்கலைக்கழகச் சபை அறையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். இவர்களின் பெயர் விபரங்கள் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளன.

அத்துடன் தகுதி பெற்ற மாணவர்களுக்குக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

— பதிவாளர்

(சி/0110)



## University Of Jaffna

**M Sc. BIO TECHNOLOGY**

Applications are invited From Graduates in Chemical Biological, Medical, Dental, Veterinary, Agriculture and Engineering Science for admission to the above course. Forward application with Biodata All applicants will be required to sit for a qualifying Examination and a viva. Address Correspondence to Registrar, University of Jaffna, Jaffna

Closing date 31st of July 1991.

REGISTRAR

(சி/0109)



## ENGLISH TEACHERS SELECTION EXAMINATION

✶ தரமான பாடக்குறிப்புகளுடன் கூடிய மாதிரி வினா - விடைக் கற்கை நெறி.
✶ வாரந்தோறும் 6 மணித்தியாலத் துரித போதனை.

ஆசிரியர் த. ந. பஞ்சாட்சரம்

**ஆரம்பம்: 17 - 06 - 1991**
மு ப. 9-30

பரீட்சைக்குரிய தகைமை:-

இரு அமர்வுக்கு மேற்படாது G.C.E O/L பரீட்சையில் தமிழ், கணிதம்/ எண்கணிதம் உட்பட 06 பாடங்களில் 03 இல் திறமைச் சித்தியுடன் ஆங்கிலத்தில் 'C' அல்லது ஆங்கிலமொழி, ஆங்கில இலக்கியத்தில் 'S' அல்லது N.C.E இல் சித்தி.

தொடர்பு கொள்க!

நிர்வாகி,
**NEW SCIENCE ACADEMY**
KANNATHIDDY, JAFFNA.

(இ-0050)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 6-1967
உதிர்வு: 30-6-1987
திதி: 14-6-1991

**அமரர் செல்வன் ஞானேந்திரன்**
(செல்வமணியம் நாகரத்தினம் தம்பதியினரின் அருமை தலைப்புதல்வனான இவர் 30-6-1987 இல் ஜேர்மனியில் காலமானார்)

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்!
கண்டு நாம் என்றும் உன் நினைவாய்
ஏங்கித் தவிக்கின்றோம் ஏன் இந்தச் சோதனை?

உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
அன்பு அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், மருமகள் மற்றும்
மாமன்மார்கள், மாமிமார்கள்,
உற்றார், உறவினர்கள்.

122/5 ஆனைப்பந்தி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[17181]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 29 — 4 — 1925



மறைவு: 15 — 5 — 1991

**அமரர் வ. வல்லிபுரம்**
(இளைப்பாறிய இறைச்சாலை உத்தியோகத்தரும், கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தரும்)

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14-6-1991 எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரன்.

மணல்திடல்,
கும்பர்மனை,
வல் வட்டித்துறை.

[17182]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதனன்று பேரணி நடத்த வலி. வடக்கு மக்கள் முடிவு

காங்கேசன்துறை, ஜூன் 13

இராணுவ நடவடிக்கை யால் பாதிக்கப்பட்டுள்ள வலி - வடக்குப் பகுதி மக்கள் தமது இன்னல்களை உல குக்கு எடுத்துக் காட்டும் வகை யில் எதிர்வரும் புதன்கிழமை யன்று பிரமாண்டமான ஆர்ப் பாட்டப் பேரணி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள் ளனர்.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு தெல்லிப்பளை துர்க் கையம்மன் கோவிலடியில் இருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகும். யாழ் செயலகத்தில் முடிவடையும் பேரணியின் இறுதியில் அர சாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று மருத னார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற வலி- வடக்கு புனர்வாழ்வுக் கழகத் தின் கலந்துரையாடலில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது. [உ-68]

# மரண அறிவித்தல்கள்

## திரு. எஸ். கே. சின்னத்தம்பி

(மலாயன் பென்சனியர்)

வல்வெட்டியைச் சேர்ந்த எஸ். கே. சின்னத் தம்பி 10-6-91 திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், சாந்திமதி, சமனாதேவி, கணேசன் [பொறியியலாளர், லண்டன்], மகேசன் [வல்வெட்டி பார்மசி] காலஞ் சென்ற விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தை யும், சின்னராசா [M. L. T. யாழ். வைத்தியசாலை] இரத்தினமலர் [லண்டன்] தவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், வசீகரன் [அமெரிக்கா], மனோ சரன் [லண்டன்], பிரபாகரன் [கனடா], பாஸ்கரன் [லண்டன்], கருணாகரன், ரூபன் [லண்டன்], கார்த் திகா [லண்டன்], நிருபா, துளசிகா, நிஷாந்தன் ஆகியோரின் பேரனுமாவார். தகனக்கிரியை 91-06-10 திங்கட்கிழமை என்னிருளம் மயானத்தில் நடைபெற் றது. உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித் தலை ஏற்றுக்கொள்ளவும்.

வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
இ. மகேசன்

[17180]

## திரு. க. இளையதம்பி

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையடி முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திரு க. இளையதம்பி அவர்கள் 13 - 06 - 1991 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [14-06-91] காலை 10-00 மணியளவில் மூளாயில் உள்ள அன் னாரின் இல்லத்தில் நடைபெறும். அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
மகன் இ. கணேசானந்தன்.

நல்லதம்பி ஸ்ரோர்ஸ்,
மூளாய்.

[17186]

## சின்னையா துரைராஜா

(ஓய்வுபெற்ற சினிமாஸ் லிமிட்டெட் பிரதிநிதி)

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சின்னையா துரைராஜா [ஓய்வுபெற்ற சினிமாஸ் லிமிட்டெட் பிரதிநிதி] காலமானார் இவர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் முரளீதரன் [லண்டன்], பூமா [கனடா], தீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், கனக விசாகனின் [கனடா] அன்பு மாமனாரும். காலஞ்சென்ற நடராஜா, தங்கமலர், ராசமலர், நேசம்மா, காலஞ்சென்ற சிதாலக்ஷ்மி, லோகநாதன் ஆகியோ ரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 13 - 6 - 91 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி துரைராஜா
மைத்துனர் கண்ணன்

[16993]

## பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை

வேலணை மேற்கைச் சேர்ந்த பண்டிதர் ச. சிதம் பரப்பிள்ளை [முன்னாள் அதிபர் யா/ வேலணை சைவப்பிரகாசம்] நேற்றுக் காலமானார். அன்னார் திரு. ச. பழநிநாதன் [டிக்கோயா வர்த்தகர்], திருமதி சுந்தரம்பிள்ளை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரர் ஆவார்.

ஈமைக்கிரியைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்,
ப. ஆரூரன்
[ஆசிரியர் வேலணை சேர். வை. து. ம. வி]

71/2 புங்கங்குளம் வீதி,
நவநீதன் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

[16994]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இல் இருக்கும் இடத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தூய தமிழ்ப் பாவனைக்கு பல்கலைக்கழக உதவி தேவை

## முத்தமிழ் விழாவில் புலிகள் பிரமுகர் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தூய தமிழ் நடைமுறைக்கு வரத்தக்க வகையிலான நடவ டிக்கைகளை—செயல் திட்டங் களை — மேற்கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகம் முன் வர வேண்டும்; தூய தமிழ்ப் படைப்புக்களை வெளியிட அறிஞர்கள் முன்வரவேண் டும்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிர மணியம் இவ்வாறு தெரிவித் தார்.

நேற்று யாழ். நகரில் நடை பெற்ற முத்தமிழ் விழாவில் விழாமலர் வெளியீட்டு விழா வுக்கு தலைமை வகித்துப்பேசு கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதா வது:

யாழ். நகரில் தமிழுக்கு எடுக்கும் முதல் விழாவல்ல இது. ஐம்பதுகளில், அறுபது களில், எழுபதுகளில் பல விழாக்கள் தமிழுக்கு எடுக்கப் பட்டன. தமிழன் அடிமையில் இருந்து மாற்றான் ஆட்சியில் அவனின் அனுமதி பெற்றே அன்றைய விழாக்களை நடத் தினான்.

சிங்களப் படையை வெளி யேற்றி, அந்தச் சிங்களவனின் அனுமதியின்றி விடுதலை பெற்று நடக்கும் முதல் விழா இன்றைய முத்தமிழ் விழா வாகும்.

புறநானூற்றில் கண்ட வீரத்தை இன்று எம் பெண் கள் செயலில் காட்டி நிற்கி றார்கள். இன்றைய எழுச்சி யையும், பெண்களின் வீரத் தையும் எடுத்துக் காட்டும் புரட்சி இலக்கியங்கள் படைக் கப்பட வேண்டும். அப்போது தான் தமிழன் தூய தமிழ் குறித்து சிந்திக்கும் நிலை உரு வாகும்—என்றார். [த-3-5-15]

## கொக்கட்டி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் ஏனைய தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் செல்வதைப் படையினர் தடுத்து வருகின் றனர்''—என்று மட்டக்களப் பில் உள்ள தொண்டர் நிறுவ னம் ஒன்றின் பிரதிநிதி ஒரு வர் சொன்னார்.

இப்படுகொலைகள் பற்றி ஜனாதிபதி பிரேமதாஸா வுக்கு அறிவிக்கப்பட்டிருப்ப தாக பி.பி.ஸி. அறிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர் பான விசாரணை நடத்தப் படுவதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரி வித்தார்.

கொக்கட்டிச்சோலை படு கொலை அண்மைக்காலத்தில் இடம்பெற்ற மிகக் கோர மான சம்பவமென்று பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ் வர் ணித்தார். (உ-ஏ-த)

## விடுதலைப்--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராஜீவ் கொலைக்குக் காரணமான பெண்ணுடன் கூடவே நின்ற பெண்ணின் பெயர் - சுபா; வாலிபரின் பெயர்-தாஸ் இவர்கள் இரு வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

முத்துராஜா என்ற விடுத லைப் புலியின் வற்புறுத்தலின் பேரில் சுபாவுக்கும் தாஸுக் கும் அவர்கள் அடைக்கலம் கொடுத்தனர்.

சுபாவும் தாஸும் எங்கு உள்ளனர் என்பது அறியப் படவில்லை. பெரும்பாலும் அவர்கள் இலங்கைக்குத் தப் பிச் சென்றிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது - என வெரித்தாஸ் வானொலி அறி வித்தது.

மேலும் கைது செய்யப்பட் டுள்ள பாக்கியநாதன், விடுத லைப் புலிகள் தலைவரான திரு பிரபாகரனின் நண்ப ரான சென்னையைச் சேர்ந்த பேபி எனப்படும் சுப்பிரமணி யத்தின் அச்சுக் கூடத்தில் வேலை பார்த்து வருகிறார்.

இந்த அச்சுக்கூடத்தில் தான் விடுதலைப் புலிகளின் பிரசார விளம்பரங்கள் அச் சடிக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

எனவே விடுதலைப் புலி களுடன் தொடர்பு கொண்ட வர்களாலேயே ராஜீவ் படு கொலை செய்யப்பட்டார் என்பது போன்று விசாரணை செல்வதாக. விடுதலைப் புலி களே ராஜீவைக் கொன்றி ருக்க வேண்டும் என்று தமிழ கத்தில் பலமாகச் சந்தேகிக் கப்படுவதாக செய்தியாளர் கள் குறிப்பிட்டுள்ளனர்— என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-ஏ]

[மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்]

## பிரெஞ்சு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சாளர் ... [illegible] ... வெளியிட்டார்.

## நாளை தேர்தல்

புதுடில்லி, ஜூன் 14

இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் மூன்றாம் கட்ட —இறுதிக்கட்ட வாக்களிப்பு நாளை சனிக்கிழமை இடம் பெறும்.

தேர்தல் பிரசாரங்கள் நேற்று மாலையுடன் முடிவ டைந்தன.

நாடாளுமன்றத் தேர்தலு டன் தமிழ் நாடு சட்டசபை பாண்டிச்சேரி யூனியன் பிர தேச சட்டசபை ஆகியவற் றுக்கான தேர்தல்களும் நாளை (சனி) இடம்பெறும். [உ-ஏ]

## காங்கிரஸுக்கு தேவிலால் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 14

எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில், இந்திரா காங்கி ரஸ் கட்சி ஆட்சி அமைக்க சமாஜவாதி ஜனதாதள் கட்சி ஆதரவு வழங்கும்.

-இப்படி துணைப் பிரதமர் தேவிலால் தெரிவித்திருக்கி றார். [உ-ஏ]

## பரந்தனில் குண்டு வீச்சு

கிளிநொச்சி, ஜூன் 14

பரந்தன் குமரபுரம் குடியி ருப்புப் பகுதியில் கடந்த வார இறுதியில் மூன்று பொம்மர் கள் குண்டு வீச்சுத் தாக்குதல் களை மேற்கொண்டன. ஞாயிறு மாலை நடந்த இத் தாக்குதல்களினால் பல வீடு கள் சேதமடைந்தன.

இதேவேளை அன்று இரவு ஆனையிறவு இராணுவ முகா மிலிருந்து நீண்ட இடை வெளிக்குப் பின்னர் கிளி நொச்சிப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது (த-த-76)

## முத்தமிழ்-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆயிரக்கணக்கான மக்கள் அலைகடலெனக் கூடினர்.

நீண்டகாலமாக மக்கள் நட மாட்டமின்றிக் கிடந்த யாழ் முற்றவெளிப் பகுதி நேற்று மக்கள் கடலாகக் காட்சியளித் தது.

நூற்றுக்கணக்கான மின் விளக்குகள். அலங்காரமாலை கள், அலங்கார வளைவுகள் என்று திரும்பும் இடமெங்கும் கண்ணைக் கவரும் காட்சிகள். அதேபோல் முற்றவெளி எங் கும் சனவெள்ளம் நிரம்பி வழிந்தது.

தமிழ் மணம் நுகர வந்த இந்தச் சன வெள்ளத்தைக் கண்ட மகிழ்ச்சியில் வானம் குதூகலிக்க, இரவு 8 மணிக் குப் பின்னர் மழை கொட் டத் தொடங்கியது. அத னைத் தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட் டன. [த-5-3-15]

## மாலைதீவில் இலங்கை மீனவர் 18பேருக்கு சிறை

மாலே, ஜூன் 14

மாலைதீவு கடற்பிராந்தி யத்தினுள் சட்டவிரோத மாகப் பிரவேசித்து மீன் பிடித்ததற்காக 18 இலங்கை மீனவருக்கு மாலைதீவு நீதி மன்றம் ஒன்று சிறைத்தண் டனை விதித்து உள்ளது.

இத்தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் படி இலங்கை அரசு மாலைதீவைக் கோரியுள்ளது.

## உயரதிகாரி தப்பினார்

புதுடில்லி, ஜூன் 14

இந்திய தொலைக்காட்சி நிறுவனமான தூரதர்ஷனின் இயக்குநர் நாயகம் திரு. எஸ். சர்மா கொலை முயற்சியில் இருந்து நேற்றுக் காலை உயிர் தப்பினார்.

ஆனால் அவர் பயணம் செய்த காரின் சாரதி, தாக்கு தலின் போது உயிரிழந்தார். திரு. சர்மாவுடன் காரில் பய ணம் செய்த பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார்.

## வ. பி. போ. ச---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையில்—

சபையில் இருந்து சுயவிருப் பத்தின் பேரில் ஓய்வு பெற்ற 85 பேருக்கான கொடுப்பன வுகள் வழங்க நிதி கொழும்பில் இருந்து கிடைத்துள்ளது என் றும்—

இவர்களுக்கான கொடுப் பனவுகளை அடுத்தவாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட் டிருப்பதாகவும் தெரியவருகி றது. [உ-3]

# மரண அறிவித்தல்

## அருளம்பலம் சோமஸ்கந்தன்

(ஓய்வுபெற்ற வர்த்தக வங்கி சிறாப்பர்)

அருளம்பலம் சோமஸ் கந்தன் நேற்று காலமா னார். இவர் கௌரியம் மாவின் அன்புக் கணவ ரும், திருமதி குகச் செல்வி கணேசபிள்ளை, குகேந்திரரூபன், அற்புத ரூபன், நிரூபன், சொரூ பவதி ஆகியோரின் அன் புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரி யைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடை பெற்று செம்மணி மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
கௌரியம்மா

2/2, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org